2013 ஏப்ரல் 25]

நிலையம் அமைக்க முன்வருவார்களா எனக் கேட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளில் கால்நடைக் கிளை நிலையம் தேவைப்படுகின்றது என்பதையெல்லாம் எங்கள் துறை ஆய்வு செய்து வருகின்றது. அந்த ஆய்வுகள் முடிவடைந்தவுடன் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியைப் பெற்று, விரைவிலே கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோழிக்குஞ்சு பொறிப்பகம் மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு உறுப்பினருடைய கோரிக்கையை எடுத்துச் சென்று, துறை பரிசீலிக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 316, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

316—

குளிர்சாதனப் பேருந்து

***21036—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளியிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தளியிலிருந்து சென்னைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், தருமபுரி மண்டலம் மூலமாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தளியிலிருந்து சென்னைக்கு நேரடியாகச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கை சராசரியாக மொத்த இருக்கையில் 73% மட்டுமே இருக்கின்றது. பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கும்போது மேற்படி வழித்தடத்தில் குளிர்சாதனப் பேருந்துகள் இயக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தளியிலிருந்து சென்னைக்கு ஒரே ஒரு பேருந்து மட்டும்தான் இயங்கிக்கொண்டு இருக்கின்றது. அந்தப் பேருந்து ஓசூர் வழியாக சென்னைக்கு வருகின்றது. தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம், ராயக்கோட்டை வழியாக பொது மக்கள் தங்களுடைய வியாபார ரீதியாகவும், அரசு அலுவல் ரீதியாகவும் தலைநகர் சென்னைக்கு வர வேண்டுமென்றால் பேருந்து வசதிகள் இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, கெலமங்கலம் வழியாக தளியிலிருந்து சென்னைக்கு ஒரு குளிர் சாதனப் பேருந்து இயக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளியிலிருந்து சென்னைக்கு இயக்கப்படுகின்ற அந்த ஒரு பேருந்தும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாம் முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த பொற்கால ஆட்சியில்தான், 18–7–2004 முதல் பொதுமக்களுடைய நலன் கருதி அந்தப் பேருந்து சென்னைக்கு இயக்கப்பட்டு வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மேற்படி வழித்தடத்தில் பயணிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கின்றது. பயணிகளின் எண்ணிக்கை

2013 ஏப்ரல் 25]

அதிகரிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று, குளிர்சாதனப் பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்திலே அந்த வழித்தடத்திலே பேருந்து இயக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 317, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

317—

வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை

***14718—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாடுவாழ் தமிழர்கள் நலனுக்கென ஒரு துறையை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உலகில் எந்த மூலையில் தமிழர்கள் வாழ்ந்தாலும் அவர்கள் நலன்களில் அக்கறை கொண்டு அவர்கள்